Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. STC .No. 175 /2019
DEPOSITION OF ACCUSED SIDE WITNESS –2

| | | | |
|---|---|---|---|
| Name: | ரவி | Calling: | செக்கூரிட்டி |
| Father's Name: | சின்னராஜ் | Religion: | |
| Village: | சம்மந்திக்குப்பம் | Age: | 53 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 09.02.2026 நேரம் : 12.45 PM

( எதிரி ஆஜர். )

கு.சா.த.சா. 2 முதன்மை விசாரணை.

புகார்தாரர் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவரை தெரியும். இருவரும் எனது அண்ணன் பிள்ளைகள் தான். எதிரி 2018 ல் அவரது அம்மா உடல் நிலை சரியில்லை என்று ரூ.3 லட்சத்தை சுதாகரிடம் வாங்கியுள்ளார். அதற்காக சாட்சிக்கேட்டதற்கு பிரேம்குமார் என்பவர் காசோலை ஒன்றை கொடுத்தார். அதில் என்ன எழுதியிருந்தது எவ்வளவு ரூபாய் என்றெல்லாம் தெரியாது. பிரேம் குமார் சுதாகரிடம் பணம் கொடுக்கும் போது நானும் உடன் இருந்தேன். எவ்வளவு ரூபாய் என்றெல்லாம் தெரியாது. அவ்வபோது கொடுத்து வந்தார். காசோலையை திருப்பி கேட்டதற்கு சுதாகர் கொடுக்கவில்லை. வேறு எதுவும் தெரியாது.

புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நானும் சுதாகரும் எவ்வளவு நாள் பேசாமல் இருக்கிறோம் என்றால் சமீபகாலமாக பேசவில்லை. சுமார் 5 வருடம் பேசாமல் இருப்போமா என்றால்

இருக்கும். சுதாகரிடம் பிரேம்குமார் எவ்வளவு ரூபாய் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ரூ,3 லட்சம் வாங்கினார். ரூ. 3 லட்சத்தை ஒரே முறையாக கொடுத்தாரா என்றால் இல்லை, அவ்வப்போது கொடுத்துவந்தார். எவ்வளவு ரூபாய் என்றால் ரூ,3 லட்சத்தையும் கொடுத்துவிட்டார். ரூ.3 லட்சத்தை எந்தெந்த தேதியில் பிரேம் குமார் வாங்கினார் என்றால் அதுக்குறித்து தெரியாது. ரூ.3 லட்சத்தை பிரேம் குமார் எந்த தேதியில் சுதாகரிடம் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது. கொடுத்தற்கான எழுத்துபூர்வமான ஆதாரம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. ரூ. 3 லட்சத்தை பிரேம்குமார் சுதாகரிடம் என் முன்னிலையில் கொடுக்கும் போது கையொப்பம் ஏதேனும் போட்டுக்கொடுக்கும் படி கேட்டேனா என்றால் இல்லை. எத்தனை காசோலைகளை பிரேம்குமார் சுதாகரிடம் பணம் வாங்கும் போது கொடுத்தார் என்றால் ஒரு செக் புக் முழுவதையும் கொடுத்தார், ஏழு முதல் எட்டு காப்பி இருக்கும். ஒரு செக் புக்கில் எத்தனை காசோலைகள் இருக்கும் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் கொடுத்த காசோலையில் எவ்வளவு ரூபாய் நிரப்பி கொடுத்தார் என்று தெரியாது என்றால் சரிதான். இன்றைய தேதி வரை காசோலையை திருப்பி தருமாறு கேட்டேனா என்றால் நான் கேட்கவில்லை, எதிரி கேட்டார், நான் உடன் இருந்தேன். எந்த தேதியில் கேட்டார் என்றால் அதுக்குறித்து எனக்கு தெரியாது. பிரேம்குமார் என்ன தொழில் செய்கிறார் என்றால் வீட்டில் உள்ளார். அவர் என்ன தொழில் செய்கிறார் என்று தெரியாது. எனக்கு காசோலை கொடுத்த விவரமோ, பணம் கொடுத்த விவரமோ எனக்கு தெரியாது என்றாலும் புகார்தாரரிடம் நான் பேச்சு வார்த்தையில் இல்லாததால் நான் எதிரிக்கு ஆதரவாக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் எதிரி புகார்தாரரிடம் பணம் கொடுக்கும் போது உடன் இல்லாததால் தான் எவ்வளவு ரூபாய் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரிதான். எனக்கு காசோலை விவரம் எனக்கு தெரியாது என்றாலும் எதிரி அழைத்ததின் பேரில் இந்நீதிமன்றத்தில் வந்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. சுதாகர் எதிரியின் மீது எவ்வளவு பணம் கொடுக்கவேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒன்றரை கோடி. ஒன்றரை கோடிக்கு value இல்லை என்று சொன்னால் ஒன்றரை கோடி வாங்க எங்களுக்கு value இல்லை . இந்த நீதிமன்றத்தில் புகார்தாரர் எத்தனை காசோலைகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

சாட்சி கையொப்பம்

(ஒம்.) ரவி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.02.10 09:44:21 +0530